**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.410/2024 நாள்- 17.07.2025

**வா.சா.1- அழகர்**

**வா.சா.1-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்**

எனக்கு இந்த வழக்கு பற்றிய விவரம் தெரியும். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதியும் எனக்கு தெரியும். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி இரவுநாயக்கர் என்ற ஈராவு நாயக்கர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிதான் தாவா சொத்தைஎனக்கு கிரையம் கொடுத்தாக கூறினேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இரவுநாயக்கர் என்ற ஈராவு நாயக்கர் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் ெசெய்யும்போதே 1ம் பிரதிவாதி இரவு நாயக்கர் என்ற ஈராவு நாயக்கர் இறந்துவிட்டார் என்றும், அவரது வாரிசுகளை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக அசல்வழக்கு 28.09.2022 அன்று தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். வழக்கு மற்றும் நிருபணவாக்குமூலத்திலும், 1ம் பிரதிவாதி தென்காசி மாவட்டம் புன்னையாபுரம் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்துவருவதாக கூறுகிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இரவு நாயக்கர் குடியிருந்த வரும் விவரம் எனக்கு தெரிந்திருந்தும் நான் தாக்கல் செய்த வழக்க நிலைக்கத்தக்கதல்ல என்பதால் தான் அவருடைய வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக ஸ்ரீவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.139/2014 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எனக்கு எதிராக தள்ளுபடி ஆகி மேல்முறையீடு தாக்கல் செய்தும் மேல்முறையீட்டு எண்.12/2019 ம் எனக்கெதிராக தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக இரண்டாம்மேல்முறையிடு செய்யவில்லை என்றால்

சரிதான். வா.சா.ஆ.13 ல் 1ம் பிரதிவாதிக்கு சொத்தில் உரிமையில்லை என்றும், அவர் எழுதிக் கொடுத் த கிரைய ஆவணம் செல்லுபடியாகாது என்றும், தீர்ப்பில் குறிப்பிடப்பட்டு வழக்கு தள்ளுபடியாது என்றால் சரிதான் அவஎண்.139/2014 வழக்கில் மதியழகன் என்பவர் 1வது சாட்சியகவும் , இரவு நாயக்கர் என்ற ஈராவு நாயக்கர் இரண்டாவது சாட்சியாகவும் மற்றும் கருப்பையா 3வது சாட்சியாகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார் எ ன்றால் சரிதான். அ.வ.எண்.139/2014 வழக்கில் சாட்சியத்தின்போது இரவு நாயக்கர் என்ற ஈராவு நாயக்கரை உதவித் தொகை வாங்கி தருவதாக கூறி கையொப்பம் பெற்றுக் கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தெற்கு பக்கம் சி.எஸ்.ஐ சர்ச் உள்ளது என்றால் சரிதான். பெரிய கருப்பன் மகன் கருப்பையா என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், சி.எஸ்.ஐ சர்ச்க்கு அந்த இடத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. (தாவா சொத்து சம்பந்தமாக அ.வ.எண்.602/2024 வழக்கு 08.10.2025 க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் குறுக்குவிசாரணைக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.